



போடிநாயக்கனூர் தொகுதி கழக வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் போடி நகரில் வீதிதோறும் ஆதரவு திரட்டினார். கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர். பொதுமக்கள் திரண்டு உற்சாக வரவேற்பளித்தனர்.






பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி ஆதரித்து திரைப்பட நடிகர் சத்யராஜ் எல்லாபுரம் மத்திய ஒன்றிய தாமரைபாக்கம் பஜார் வீதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் தொகுதி பார்வையாளர் பிடிசி.செல்வராஜ், ஒன்றியச் செயலாளர் தங்கம் முரளி, ஒன்றிய கண்காணிப்பாளர் எஸ்.ஜெயபாலன், சி.பி.எம். சம்பத், ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த்,நிர்வாகிகள் வெங்கல் ஜி.பாஸ்கர், எம்.பார்க்கத்துல்லாகான், டி.பாஸ்கர், கே.ஜி.அன்பு, இ.சுப்பிரமணி, உமா சீனிவாசன், ஏ.கே.எம்.சரத் குமார், ஆயில்சேரி ராகு, எம்.எல்.டேவிட், எம்.ரஜனி, காரணி சத்யா, ஜி.சங்கர், சு.ராகு, என்.எம்.விஜயகுமார், அச்சுதன், வேலன், வி.செல்வம், சர்தார், வெங்கடேசன், துளசிரமன், துரைகன்னு, அழகேசன், ராஞ்த்,உள்பட திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## மயிலை தொகுதி கழக வேட்பாளர்

# மயிலை த.வேலுவை ஆதரித்து ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன் தீவிரப் பிரச்சாரம்!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு அறிக்கை!

சென்னை, ஏப். 21-

மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளரும், மாவட்ட கழக செயலாளருமான மயிலை த.வேலு அறிக்கை வருமாறு:



மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர் த.வேலு அவர்களை ஆதரித்து 21/04/2026 இன்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் நிறுவனரும் தலைவருமான கமல்ஹாசன் அவர்கள் மதியம் 3.30 மணி அளவில், மயிலை மாங்கொல்லை கிழக்கு மாட வீதியில் பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளார்.

அது சமயம், மயிலாப்பூர் தொகுதி அனைத்து கழக நிர்வாகிகள், மற்றும் அனைத்து கூட்டணி கட்சி தலைவர்கள், மற்றும் கழக தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு தெரிவித்துள்ளார்.

## கும்முடிப்பூண்டி தொகுதி வேட்பாளர்

# டி.ஜெ.கோவிந்தராஜன் கும்முடிப்பூண்டி ஒன்றியம் - பேரூரில் இன்று தீவிரப் பிரச்சாரம்!

## கிராமம் கிராமமாக வாக்கு சேகரிக்கிறார்!

திருவள்ளூர், ஏப்.21-

கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் இன்று (21.4.2026 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி முதல் கும்முடிப்பூண்டி மேற்கு, தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூரில் வாக்கு சேகரிக்கிறார் என்று மாவட்ட கழக பொறுப்பாளர் - வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவித்துள்ளார்.

அது வருமாறு:-

கும்முடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் இன்று கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியத்தில் ஏகுமதுரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காலை 8:00 மணி முதல்10:00 மணி வரை வாக்கு சேகரிக்கிறார்.

அதனைத் தொடர்ந்து கும்மிடிப்பூண்டி பேரூரில் மேட்டுக் குடியிருப்பு, வெட்டுக் குடியிருப்பு, தபால்தெரு, மேட்டுத் தெரு, ரெட்டம் பேடு கூட்டுச்சாலை, ஜி.என்.டி. ரோடு, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, வசந்த பஜார், வள்ளியம்மை நகரில் பிற்பகல் 2 மணிக்குபிற்பகல் பிரச்சாரத்தை நிறைவு செய்கிறார்.

தொடர்ந்து வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் மாலை 4 மணிமுதல் கும்முடிபூண்டி தெற்கு ஒன்றியம் கவரப்பேட்டையில் தொடங்கி இறுதிகட்டப் பிரச்சாரத்தை நிறைவு செய்கிறார்.

எனவே இந் நிகழ்ச்சிகளில் தி.மு.க. - கூட்டணி கட்சி நிர்வாகிகள் தோழர்கள் திரளாக கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வல்லூர் எம்.எஸ்.கே.ரமஷ் ராஜ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# களத்தில் இளைஞர் அணி

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:





பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி,
தருமபுரி கிழக்கு மாவட்டம்.





வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி,
சேலம் கிழக்கு மாவட்டம்.





மேலூர் சட்டமன்றத் தொகுதி,
மதுரை வடக்கு மாவட்டம்.





கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி,
நாகப்பட்டினம் மாவட்டம்.





பேராவூரணி சட்டமன்றத் தொகுதி,
தஞ்சாவூர் தெற்கு மாவட்டம்.





ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி,
திருநெல்வேலி மேற்கு மாவட்டம்.





கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.





அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி,
இராணிப்பேட்டை மாவட்டம்.





திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி,
சென்னை கிழக்கு மாவட்டம்.